**செய்தி வெளியீடு எண்: 685** **நாள்: 22.09.2018**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (22.9.2018) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,
பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில்
தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு
தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!

இந்த விழாவிலே சிறப்பாக எழுச்சியுரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

இந்த மாவட்டத்தில் இன்னென்ன பணிகள் நிறைவேற்ற வேண்டும் என்று
கோடிட்டு காட்டி அமர்ந்திருக்கின்ற
மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல்
போக்குவரத்துத்துறை இணை அமைச்சர்
**திரு பொன். ராதாகிருஷ்ணன்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!,
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!
அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியை சீரோடும், சிறப்போடும், எழுச்சியோடும்
கன்னியாகுமரி மாவட்டம் அம்மாவுடைய கோட்டை என்று நிரூபித்து காட்டிய
சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய அடித்தளமாக விளங்கிய

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!

மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **ஏ.விஜயகுமார்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர்
திருமதி **பா.வளர்மதி** அவர்களே!
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர்
**திரு. எஸ்.ஆஸ்டின் அவர்களே!**
நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர்
திரு. என்**. சுரேஷ்ராஜன்** அவர்களே!
குளச்சல் சட்டமன்ற உறுப்பினர்
**திரு. ஜே.ஜி.பிரின்ஸ்** அவர்களே!
பத்மனாபபுரம் சட்டமன்ற உறுப்பினர்
**திரு.டி.மனோ தங்கராஜ்** அவர்களே!
விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர்
**திருமதி எஸ்.விஜயதாரணி** அவர்களே!
கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர்
**திரு.செ.ராஜேஷ் குமார்** அவர்களே!

வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அரசுச் செயலாளர்
திரு. **வெங்கடேசன்** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள கன்னியாகுமரி
மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **பிரசாந்த் வடநேரே** அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!,
தலைமைக் கழக நிர்வாகிகளே!,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முன்னாள் தலைவர்
திரு ஏ. தமிழ்மகன் உசேன் அவர்களே!
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை  தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கடலும் சங்கமிக்கும் புண்ணிய பூமி கன்னியாகுமரி.  சங்கம் அமைத்து
தமிழ் வளர்த்த குமரிக் கண்டத்தை கடல் கொண்டது என்று
ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள்.

**குமரி அன்னை** தவக்கோலத்தில்
இருக்கிறாள் என்பதை
**“நீலத்திரைக் கடல் ஓரத்திலே**
**நித்தம் தவம் செய்யும் குமரி”** என
அழகுற பாடினார் **மகாகவி பாரதியார்** அவர்கள்.

அந்த  அன்னையின் திருப்பெயரால் அழைக்கப்படுகின்ற மாவட்டம்
கன்னியாகுமரி மாவட்டம்.

பார்வதி தேவி எடுத்த ஒரு அவதாரத்தில் சிவனை திருமணம் செய்து கொள்ள
முடியாத நிலையில் கன்னியாகவே தவம் இருந்ததால், இந்த இடம்
கன்னியாகுமரி என்று பெயர் பெற்றதாக கூறுவர்.

சிறப்பு வாய்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும்  மாண்புமிகு பாரத
ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி
அடைகிறேன்.

மொழியால், பண்பாட்டால் தமிழர்களாக
வாழ்ந்து வந்த நாஞ்சில் நாடு மற்றும்
எடநாட்டு மக்கள் தாய்த் தமிழகத்தோடு
இணைய பாடுபட்டனர்.

தமிழ்நாட்டுடன் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற போராட்டத்தில்
மார்ஷல் நேசமணியுடன், குஞ்சன் நாடார்,
சிதம்பரம் பிள்ளை, சிவதாணுப் பிள்ளை, நத்தானியேல், அப்துல் ரசாக்,
சிதம்பரநாதன் நாடார், தாணுலிங்க நாடார், பொன்னப்ப நாடார், ராமசாமி பிள்ளை என
இன்னும் பலர் இப்போராட்டத்திற்கு துணை நின்றனர்.

**இந்த தியாகச் செம்மல்களின் அரும் போராட்டத்தால்
1956 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள்
கன்னியாகுமரி மாவட்டம் உதயமானது.**

**குமரித் தந்தை மார்ஷல் நேசமணி** அவர்களின்
நினைவைப் போற்றும் விதமாக 1983 ஆம் ஆண்டு மாண்புமிகு
**புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள் நாகர்கோவிலை தலைமையிடமாக கொண்ட நேசமணி போக்குவரத்துக் கழகத்தினை ஏற்படுத்தினார்கள்.**

இங்கு மூன்று கடல்கள் மட்டுமல்ல,
மூன்று மதங்களும் சங்கமிக்கின்றன.

மும்மதங்களைச் சார்ந்த
புராதன மிக்க வழிபாட்டுத் தலங்களும்,
இங்கு சிறப்புடன் விளங்குகின்றன.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில், மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில், கொல்லங்கோடு பகவதி அம்மன் கோவில்,
சுசீந்திரம் தாணுமாலய பெருமாள் கோவில்,
கேரளபுரம் அதிசய விநாயகர் கோவில்,
பறக்கை மதுசூதனப் பெருமாள் கோவில்,
பத்மநாபபுரம் ராமசுவாமி குமார கோவில், வெள்ளிமலை முருகன் கோவில்,
சிதரால் ஜெயின் மலைக்கோயில் என
எண்ணற்ற திருத்தலங்களால் ஆன்மிக பூமியாக விளங்குவது குமரி மாவட்டம்.

புனித சவேரியார் வருகையின்
நினைவாக கட்டப்பட்ட,
**கோட்டாறு சவேரியார் ஆலயம்,**
**கன்னியாகுமரி அலங்கார உபகார அன்னை ஆலயம்,**
**ராஜாவூர் அதிதூதர் புனித மைக்கல் ஆலயம்,**
**முட்டம் சகல புனிதர்கள் ஆலயம்** ஆகிய
பழமை வாய்ந்த கிறிஸ்துவ வழிபாட்டுத் தலங்கள் இம்மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கின்றன.

இளங்கடையில் உள்ள மிகப் பழமை வாய்ந்த
பெருநாள் தொழுகை நடத்தும் இடம்
சித்தர்களில் ஒருவராகக் கருதப்படும்
**தக்கலை பீர் முகமது சமாதி அடைந்த தர்கா, திருவிதாங்கோடு முகமது சாகிப் தர்கா**
ஆகிய இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள்
மிகவும் பிரபலமானவை.

இங்கு மாத்தூர் தொட்டி பாலம்,
மருத்துவமலை, முக்கூடல், முருகன் குன்றம்,
முட்டம் கடற்கரை, சங்குத்துறை கடற்கரை, தேங்காய்பட்டினம் கடற்கரை,
பத்மநாபபுரம் அரண்மனை, சுசீந்திரம்,
திற்பரப்பு அருவி, திருவட்டாறு,
உலக்கை அருவி, உதயகிரி கோட்டை போன்ற ஏராளமான சுற்றுலாத் தலங்கள் குமரி மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கின்றன.

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமயமான
**அய்யாவழி எனும் வைகுண்ட சாமி** இயக்கத்தின் பிறப்பிடம் கன்னியாகுமரி மாவட்டமாகும்.

சமூக மாற்றத்திற்கு வித்திட்ட
**அய்யா வழி வைகுண்ட சாமி கோயில்**
**சாமி தோப்பில்** உள்ளது.

இந்தியாவின் தென்கோடி முனையில் அமைந்துள்ள கன்னியாகுமரியில்
காலையில் சூரியன் உதயமாவதையும், மாலையில் சூரியன் மறைவதையும்,
இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வரும்
சுற்றுலா பயணிகள் கண்டு களிக்கின்றனர்.

**1892**ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர்
இங்கு வந்து, **ஸ்ரீபாத பாறையில்,**
அறிவு விளக்கம் பெற்று சென்றதை
நினைவு கூரும் வகையில் இங்கு
நினைவு மண்டபம் கட்டப்பட்டது.

மகாத்மா அவர்களின் அஸ்தி கரைக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில், இங்கு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அண்ணலின் பிறந்த நாளான அக்டோபர் 2ந்தேதி சூரிய ஒளி இங்குள்ள மண்டபத்தில் விழும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டே
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா
நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் எதிர்பாராமல் இம்மாவட்டம்
“**ஒகி**” புயிலினால் பாதிக்கப்பட்டதால்,
இவ்விழா நடைபெற முடியாமல் போய்விட்டது.

தற்போது கன்னியாகுமரி மாவட்ட மக்களின் பேராதரவோடு சீரோடும், சிறப்போடும் இவ்விழா நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்த இயக்கத்தின் ஆணிவேரான மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
நூற்றாண்டு விழாவினை கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில்,
இம்மாவட்ட மண்ணின் மைந்தர் கலைவாணர் மற்றும்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குமான
தொடர்பைப் பற்றி இங்கு நினைவு கூறுவது
பொருத்தமாக இருக்கும்.

ஏற்கனவே நம்முடைய சட்டப்பேரவை தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதைத் தொடர்ந்து நானும் இங்கே சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.
திரைப்படத் துறையில் தான் சம்பாதித்த பணத்தை ஏழைகளுக்கும், தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் வாரி வழங்கிய கொடையாளி, திரைப்படைத் துறையின் மூலம் சமுதாய மாறுதலுக்கான கருத்துக்களை வழங்கியவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள்.

இந்த வள்ளலைப் பற்றி,
இன்னொரு வள்ளலான
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
தான் எழுதிய “ **நான் ஏன் பிறந்தேன்**”
புத்தகத்தில் பெருமையுடன் கூறியதை
இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

**“கடந்த வாரத்தில் ஒரு நாள்**
**எனது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க**
**ஒரு மகிழ்ச்சியான நாளாக அமைந்தது.**
**1972ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம்**
**தேதிதான் அந்த நன்னாள் ஆகும்.**
**ஏனென்றால் மறைந்த கலைமேதை**
**கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் உருவச்சிலையை திறந்து வைக்கும்**
**நற்பேற்றை நான் பெற்றேன்,**” என்று
புரட்சித் தலைவர் பெருமையுடன்
அந்த புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**“முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள்**
**கலைவாணரின் சிலையை திறந்து வைத்தார்கள்.**
**அறிஞர் அண்ணாவின் கரத்தால் திறக்கப்பட்டதால் கலைவாணர் அவர்கள் உயர்ந்தார்கள்.**
**மேலும் கலைவாணர் அவர்களின் சிலையினை**
**இன்று திறந்ததால் நான் உயர்த்தப்பட்டேன்.**

**இதுதான் ஒருவரின் தகுதி விளக்கத்திற்கு எடுத்துக்காட்டு. நான் என் வாழ்நாளில்**
**இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் இவ்வளவு மிகப்பெரிய மக்கள் கூட்டத்தை கண்டிருந்தால்,**
**அவற்றில் இது முதன்மையானது என்று கூறுவது**
**மிகப் பொருத்தமுடையது என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.**

**நகைச்சுவை நடிகன் என்றால்,**
**கூத்தடிப்பவன், கோமாளி என்றெல்லாம் பன்னெடுங்காலமாக நம்பப்பட்டு வந்த இலக்கணத்தையே மாற்றி,**
**மக்களை சிரிக்க வைக்கும் போதே,**

**சிந்திக்க வைக்கும் பொறுப்பும்**
**நகைச்சுவை நடிகனுக்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தியவர் கலைவாணர் அவர்கள்,''**
என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பத்திரிகைக்கு அளித்த கேள்வி பதில் நிகழ்ச்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது.

**''உங்கள் வாழ்க்கையில் எப்போதும் நினைத்து சிரித்து மகிழும்படி நடந்த நிகழ்ச்சியை கூற முடியுமா ?''**

அதற்கு புரட்சித் தலைவர் அவர்கள்
''கலைவாணர் அவர்களுடைய சில செயல்கள் ஆச்சரியப்பட வைக்கும். ஒரு முறை நாதசுவர மேதை திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை,
இசை நிகழ்ச்சிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார். பொதுவாக இசை வித்வான்கள் யாராக இருந்தாலும் பெரும்பாலும் வீட்டில் சிறிது நேரம் சாதகம் செய்துவிட்டுத்தான் புறப்படுவார்கள்.

அங்கிருந்த கலைவாணர்
''என்னய்யா புறப்படுங்க'' என்றார்.

அதற்கு திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை அவர்கள் கலைவாணரைப் பார்த்து
''நாதசுவரம் வாசிப்பது என்ன,
விளையாட்டு என்று நினைச்சீங்களா !
எவ்வளவு கஷ்டம் தெரியுமா ?
வாசித்து விட்டு புறப்பட்டால் நல்லது'' என்றார்.

''ஆமா பெரிய வாத்தியம்'' என்றார் கலைவாணர்.

''இப்படி சொல்கிறீர்களே,
உங்களால் வாசிக்க முடியுமா ?'' என்றார் ராஜரத்தினம் பிள்ளை கடுமையாக.

கலைவாணர் உடனே நாதசுவரத்தை வாங்கி, **சுகஜீவனா** என்ற பாடலை, **ஆனந்த பைரவி ராகத்தில்** இனிமையாக வாசித்தார்.

நாங்கள் ஆச்சரியத்தாலும், அதிசயத்தாலும்

அப்படியே மலைத்துப் போனோம் .

இசை மேதை திருவாடுதுரை ராஜரத்தினம் பிள்ளையிடம் இவ்வளவு துணிவோடு கலைவாணரைப்போல் யாரால் கேட்க முடியும் ? கேட்டதோடு மட்டுமின்றி,
இனிமையாக வாசித்து முடிப்பது என்றால்
அதிசயம் அல்லவா ? இதுபோல
பல நிகழ்ச்சிகள்,'' என்றார், மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

புரட்சித் தலைவர் அவர்களின் அரசியல் வாரிசு
நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தனது ஆசானின் வழியிலேயே அழகு மிளிரும்
புதிய கலைவாணர் அரங்கத்தை மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டி முடித்து, தனது திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள்.

**“திருவளர் செல்வியோ, நான் தேடிய தலைவியோ''**
என்ற பாடல் வரிகள் மூலம் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள், தனது
அரசியல் வாரிசு மாண்புமிகு அம்மா அவர்கள் தான் என்பதை
தீர்க்கதரிசனமாக அன்றே கூறிவிட்டார்கள்.

அதனைச் செயல்படுத்தும் விதமாக,
அவரை கடலூர் மாநாட்டில் கொள்கை பரப்புச் செயலாளராக நியமித்தார்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

அதுமட்டுமின்றி 1984ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் ஆக்கினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநிலங்களவையில், தனது கன்னிப் பேச்சில், தமிழ்நாட்டில் மின்சாரம் பற்றியும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பது பற்றியும் பேசினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும் மாநிலங்கள்அவையில் தனது கன்னிப் பேச்சில்

இதே பொருள் பற்றித்தான் பேசினார்கள். அண்ணாவுக்கு வழங்கப்பட்ட இருக்கை எண்.185 என்ற அதே இருக்கைதான் மாண்புமிகு அம்மாவுக்கும் வழங்கப்பட்டது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு முழுவதும் கட்சி கொள்கையை பரப்ப சுற்றுப்பயணம் செய்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் செல்லும்
அனைத்து பொதுக் கூட்டங்களிலும்
பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.
இதை கேட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.
தனக்கு பிறகு இந்த இயக்கம் எந்த தொய்வும் இல்லாமல் பல ஆண்டுகள் தொடர்ந்து இயங்கும் என்ற நம்பிக்கை அவருக்கு அன்றே வந்தது.

1984ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் சிகிச்சை பெற அமெரிக்காவிற்கு சென்றார்.
அந்த நேரத்தில் சட்டமன்றத்திற்கான தேர்தல் வந்தது.
அஇஅதிமுக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்பதற்காக, புரட்சித் தலைவரின் வாரிசாக
தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்தார்
மாண்புமிகு அம்மா அவர்கள். அவர் தனது
முதல் பொதுக் கூட்டத்தை புரட்சித் தலைவர்
போட்டியிட்ட ஆண்டிப்பட்டியில் தொடங்கினார்.

அவரது பிரச்சாரத்திற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. இதே தொகுதியில்தான் பிற்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களும் போட்டியிட்டு முதலமைச்சரானார்கள் என்பது வரலாறு.

**“மக்கள் கொடுக்கும் வரிப்பணம்,
மக்களின் நல்வாழ்வுக்காக பயன்பட வேண்டும். மக்களுடன் கூடி இரு; மக்களுடன் பழகு, அவர்களுடன் வாழ்; அவர்களுக்காகத் திட்டம் தீட்டிச் செயல்படு; மக்களிடம் நீ போ – செய் என்றெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் நான் செய்கிறேன். அப்படி பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை எந்த வகையில் நிறைவேற்ற வேண்டுமோ அந்த வகையில் நிறைவேற்றி வருகிறோம்”** என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மேற்கூறிய கூற்றின்படி மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் செயல்பட்டு வருகிறது.

**"ஆதி அந்தமும் அவள்தான்,**
**நம்மை ஆளும் நீதியும் அவள்தான்,**
**அகந்தையை அழிப்பாள்,**
**ஆற்றலை கொடுப்பாள்**
**அவள் தான், அன்னை மகா சக்தி"**

என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளின்படி நம்மையெல்லாம் இன்றும் வழிநடத்தி காத்துக் கொண்டிருப்பவர் **மகாசக்தியாக** திகழும் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் தான் என்பதை நான் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட **'ஒகி'** புயலினால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில்
இயல்பு நிலை திரும்ப மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே
உங்கள் முன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மூத்த அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள்**
**என பலரும் உடனடியாக கன்னியாகுமரிக்கு**
**வந்து மீட்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டார்கள். நானும், 12.12.2017 அன்று நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு, நிவாரண உதவிகளை அன்றே அறிவித்தேன்**

- ஒகி புயலால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக
  30 ஆயிரத்து 756 மீனவ குடும்பங்களுக்கு
  தலா 5000 ரூபாய் வீதம் 15 கோடியே 37 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

- **மீனவர்களுக்காக கம்பியில்லா தொலை தொடர்பு சாதனங்கள் (Wireless sets)**
  **62 கோடியே 14 லட்சம்** ரூபாய்க்கு **வழங்கிட தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. தற்போது கன்னியாகுமரியில் மட்டும் 2150 மீனவர்களுக்கு கம்பியில்லா தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது.**

- ‘ஒகி’ புயலினால், ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களுக்கும், அவர்களது படகுகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மீனவ மக்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல்வேறு மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- தொலைதூர மாநிலங்களின் கடற்கரைகளில் ஒதுங்கிய மீனவர்களை பாதுகாப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கொண்டு வருவதற்கு மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் பணியில் அமர்த்தப்பட்டனர். அவர்களை பாதுகாப்பாக கொண்டு வருவதற்கு விசைப் படகு ஒன்றிக்கு அதிகபட்சமாக 1,000 லிட்டர் டீசல் வழங்கப்பட்டது.

- ஒகி புயலில் மரணமடைந்த 24 மீனவர்களின் குடும்பத்தினருக்கு, குடும்பம் ஒன்றிற்கு 20 லட்சம் ரூபாய் நிவாரண தொகை வீதம் 4 கோடியே 80 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- காணாமல் போன மீனவர்களின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி, காணாமல்போன 138 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு 27 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் தலா 10 லட்சம் ரூபாய் வீதம் காசோலையும், 6 மாத கால அவகாசத்தில் பெற்றிடும் வகையில் 10 லட்சம் ரூபாய் வைப்பு நிதியும் மாண்புமிகு அம்மாவின் அரசால் 14.3.2018 அன்று வழங்கப்பட்டது.

- இறந்த மற்றும் காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க 136 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு 27.8.2018 அன்று என்னால் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு, அம்மாவின் அரசு காப்பாற்றி இருக்கிறது.

- மீனவர்களின் சேதமடைந்த படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு நிவாரணமாக 8.44 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- **ஒகி புயலினால் ஏற்பட்ட பல்வேறு நிகழ்வுகளினால் உயிரிழந்த 15 மீனவர் அல்லாத நபர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிவாரண உதவியாக 1 கோடியே 50 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.**

- **ஒகி புயலால் பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு வாழை, ரப்பர், கிராம்பு மற்றும் பிற பயிர் சேதத்திற்கென 36 கோடியே 95 லட்சம் ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசு நிவாரணமாக வழங்க ஆணையிடப்பட்டது.**

- தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறை பணியாளர்களின் இடைவிடாத உழைப்பின் காரணமாக சாலையில் விழுந்த மரங்கள் அகற்றப்பட்டு விரைவில் போக்குவரத்து மற்றும் குடிநீர் வழங்கல் சீர் செய்யப்பட்டன.

- இவற்றிக்கெல்லாம் மேலாக மின் தேவையின் அவசர அவசியத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, மின்சார வாரியத்தின் தலைமை பொறியாளர்கள், அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்களை குழுக்களாகப் பிரித்து பகுதி வாரியாக அனுப்பி அவர்கள் ஆற்றிய அயராத பணியின் காரணமாக, வெகு குறுகிய காலத்தில் மின்சாரம் தடையின்றி அனைத்து பகுதிகளுக்கும் வழங்கப்பட்டது.

- **பலத்த புயலின் காரணமாக சிதைந்த 15,858 மின் கம்பங்கள் புதிதாக நடப்பட்டன.**

- **1,085 கிலோ மீட்டருக்கு மின் கம்பிகள் புதிதாக நிறுவப்பட்டன.**

- **கிட்டத்தட்ட 100 பழுதடைந்த மின் மாற்றிகள் நீக்கப்பட்டு புதிய மின்மாற்றிகள் நிறுவப்பட்டன. இதன் காரணமாக ஒரே நாளில் அரசு மருத்துவமனை மற்றும் முக்கிய இடங்களில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி பகுதிகளுக்கு 3வது நாளிலும், மற்ற இடங்களில் 5வது நாளிலும் மின்சார இணைப்பு வழங்கி நடவடிக்கை எடுத்த அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.**

- ❖ இதன் காரணமாக, பிற சீரமைப்பு பணிகளையும் விரைந்து முடித்து மாவட்டம் குறுகிய காலத்தில் இயல்பு நிலைக்கு திரும்பியது.

- ❖ **கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் கடலுக்குள் சென்று காணாமல் போகும் தருணத்தில் அவர்களை மீட்கும் பொருட்டு ஹெலிகாப்டர் தளம் அடங்கிய இந்திய கடலோர காவல்படை நிலையம் ஒன்று (Indian Coast Guard Station) ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் வலியுறுத்தி கேட்டுக்கொண்டுள்ளேன்.**

மக்களின் நலனில் எப்போதுமே அக்கறை கொண்ட அரசு அம்மாவின் அரசு. மக்களை நாடி நேரடியாக செல்லும் அரசு அம்மாவின் அரசு என்பது இதன் மூலம் தெள்ளத் தெளிவாக மக்களுக்கு விளங்கும் என்று நம்புகின்றேன்.

இந்த அரசு, பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு அம்மா ஆகியோரின் கொள்கை வழி நின்று அவர்களின் வழிகாட்டுதலின்படி மக்களுக்காக பணியாற்றும் அரசு.

**“கல்விக்குச் சாலை உண்டு,**<br>
**நூலுக்கு ஆலையுண்டு**<br>
**நாட்டுக்குத் தேவையெல்லாம்**<br>
**நாம் தேடலாம்**<br>
**தோளுக்கு வீரம் உண்டு**<br>
**தோற்காத ஞானம் உண்டு**<br>
**நீதிக்கு நெஞ்சம் உண்டு,**<br>
**நாம் வாழலாம்**<br>
**சிரிக்கும் ஏழை முகம் பார்க்கலாம்**<br>
**சிந்தும் கண்ணீர்தனை மாற்றலாம்**<br>
**வாருங்கள் தோழர்களே,**<br>
**ஒன்றாய் சேருங்கள் தோழர்களே”**<br>
என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில்,

மாண்புமிகு அம்மா அவர்களாலும்,<br>
மாண்புமிகு அம்மாவின் அரசாலும்<br>
இந்த மாவட்டத்தில் ஒவ்வொரு துறையிலும்

பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.  அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு விஞ்ஞான கல்வியை மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்திற்கு தந்துவிட்டு சென்றிருக்கிறார்கள். இந்தியாவிலேயே எத்தனையோ மாநிலங்கள் இருக்கின்றன. எந்த மாநிலத்திலும், நம்முடைய குழந்தைகள் விஞ்ஞான கல்வி, அறிவுபூர்வமான கல்வி, உலகத்தரத்திற்கேற்ற கல்வி கிடைக்க வேண்டும் என்று சொன்னால், அப்படிப்பட்ட செய்தி எந்த மாநிலத்திலும் கிடைக்க வில்லை. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆண்ட தமிழகத்தில், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குழந்தைகளுடைய எதிர்காலத்தை எண்ணி, விஞ்ஞானபூர்வ கல்வி, இன்றைக்கு உலக நாடுகளில் இருக்கின்ற கல்விக்கு இணையாக கல்வி, தமிழகத்திலே கிடைக்க வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 118 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டது இந்த மாவட்டத்தில் என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மடிக்கணினியின் விலை சுமார் 14 ஆயிரம் ரூபாய் ஆகின்றது. இந்த பணத்தை கொடுத்து வாங்கி படிப்பதற்கு இல்லாத சூழல் பல குடும்பங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவிகள் எல்லாம் அறிவுத்திறன் மிகுந்தவர்களாக இருப்பார்கள். ஆனால் பொருளாதார சூழ்நிலையின் காரணமாக மடிக்கணினி வாங்க முடியாத சூழ்நிலை. அப்படிப்பட்ட மாணவ செல்வங்களுக்கு அறிவுத்திறனை வளர்ப்பதற்கு உலகத்தரத்திற்கு ஏற்ற விஞ்ஞான கல்வி கொடுப்பதற்கு அம்மா அவர்கள் புதிய சாதனை படைத்திருக்கின்றார்கள். நம்முடைய மாணவச் செல்வங்கள் எதிர்காலத்திலே மிகச் சிறந்த கல்வியாளர்களாக விளங்க வேண்டும் என்பதற்காக இந்த மடிக்கணினியை இந்த மாணவ செல்வங்களுக்கு கொடுத்து அழகு பார்த்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்பதை பெருமையுடம் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ்
5 லட்சத்து 27 ஆயிரத்து 164 குடும்ப அட்டைதாரர்களுக்கு,  மாதந்தோறும் 10 ஆயிரத்து 450 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில்,  அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு 821 கோடியே

67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24,987 வீடுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, தமிழகத்தை பொறுத்தவரைக்கும் இன்றைக்கு பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு வீடு இல்லை என்ற நிலை இன்றைக்கு அம்மாவுடைய அரசு போக்கிக் கொண்டிருக்கிறது என்பதை இதன் வாயிலாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு பாதுகாப்பான மீன்பிடி உள்கட்டமைப்புகளை உருவாக்கிடும் வகையில், குளச்சலில் 96.72 கோடி ரூபாய் செலவில் புதியதாக மீன்பிடி துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டும், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் 81.22 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், தேங்காய்பட்டினத்தில் 97.4 கோடி ரூபாய் செலவில் புதியதாக மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட மீனவ மக்களுக்கு மீன்பிடி குறைந்த கால நிவாரணமாக 14 கோடியே 32 லட்சம் ரூபாயும், மீன்பிடி தடைக்கால நிவாரணமாக 14 கோடியே 64 லட்சம் ரூபாயும், மற்றும் மீனவர் மற்றும் மீனவ மகளிர் சேமிப்பு நிவாரண திட்டத்தின்கீழ் 27 கோடியே 94 லட்சம் ரூபாயும் என மொத்தம் ஆண்டொன்றுக்கு 56 கோடியே 88 லட்சம் ரூபாய் அளவுக்கு நிவாரணம் அம்மாவுடைய அரசால் வழங்கப்படுகிறது.

தோவாளையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மலர் வணிக வளாகமும், பூதப்பாண்டியில் 1.50 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையமும் என்னால் திறந்து வைக்கப்பட்டன.

இன்னமும் சொல்லிக்கொண்டே போகலாம். காலத்தின் அருமை கருதி சுருக்கமாக இங்கே சிலவற்றை மட்டும் குறிப்பிட்டுள்ளேன்.

சீரோடும் சிறப்போடும்  கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய உங்கள் அனைவரையும் காண்பதிலும், எனது எண்ணங்களை பகிர்ந்து கொள்வதிலும்,  புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவேற்றப்பட்ட திட்டங்களை திறந்து வைத்து , நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுப்பணித்துறையின் மூலம்
6 கோடி  ரூபாய் மதிப்பில்,  நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த
தொழிலாளர் அலுவலக கட்டடம்,
பளுகல் அரசு உயர்நிலைப் பள்ளியில் வகுப்பறை கட்டுதல் உட்பட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்,

வாரியூரில் கால்நடை மருந்தக கட்டடம் உட்பட
13 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பிலான கட்டடங்களை  நான் இன்று திறந்து வைத்துள்ளேன்.

மீன்பிடி துறைமுக திட்டக் கோட்டம்,
நாகர்கோவில், சார்பில் 12 கோடி ரூபாய்
மதிப்பீட்டில் பொழிக்கரை கிராமம், கேசவன்புத்தன்துறை மற்றும் பள்ளம்துறை கிராமங்களில் கட்டப்பட உள்ள மீன் இறங்குதளம் உட்பட 31 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் 67 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 14 ஆயிரத்து 911 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்ற குறுகிய காலத்திலேயே, பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.  மேலும் நீர்நிலைகளின் கொள்ளவை அதிகரிக்க குடிமராமத்து திட்டம்,

விவசாயிகளின் உரத்திற்கு தேவையான
வண்டல் மண்ணை விலையில்லாமல் வழங்கும் திட்டம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மக்கள் இந்த ஆட்சியின் சாதனைகளை நன்கு உணர்ந்துள்ளனர். ஆனால் ஒரு சிலர் இந்த ஆட்சியை குறை சொல்லியும், தேவையற்ற சவால்களை விடுத்தும் வருகிறார்கள். இதை நினைக்கும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

பகவான் புத்தர் அறநெறிக் கொள்கைகளை பரப்பினார். அவற்றைச் சிலர் ஏற்று,
அவரைப் போற்றினர்.
வேறு சிலர் அதை ஏற்காமல் தூற்றினர்.
கடுமையான சொற்களால் தாக்கியும் பேசினர்.

ஒரு நாள் புத்தர் ஓர் ஊருக்குச் சென்றார்.
அங்கு ஒருவன் புத்தரை கடுமையான சொற்களால் ஏசினான். ஆனால் புத்தர் முகத்தில்
புன்னகை தவழ்ந்தது. புத்தர் அவனிடம்
**'நண்பரே அருகில் வந்து அமருங்கள்'**
என்று அழைத்தார்.
அவனும் அவர் அருகில் சென்று அமர்ந்தான். புத்தர்

**'நண்பரே, நீங்கள் மற்றவர்களை பார்க்கச் செல்லும்போது கையில் ஏதாவது எடுத்துச் செல்வதுண்டா ?'** என்று கேட்டார்.

**' ஆம் பழங்களை எடுத்துச்செல்வேன்,'** என்று அவர் கூறினார்.
**'நீங்கள் அளிக்கும் பழங்களை நீங்கள்
காணச் சென்றவர் ஏற்க மறுத்தால் நீங்கள்
அவற்றை என்ன செய்வீர்கள் ?'** என்று புத்தர் கேட்டார்.

அதற்கு அவர்
**'பழங்களை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு திரும்புவேன்'** என்றார்.

உடனே புத்தர்
**' அதைத்தான் நீங்கள் இப்போது செய்யப் போகிறீர்கள். திட்டுவது உங்கள் சுதந்திரம். அதை ஏற்பதும், ஏற்காததும் எனது சுதந்திரம். நீங்கள் என்னை அவமதித்து பேசிய பேச்சுக்களை நான் ஏற்கவில்லை. பழங்களை திரும்ப எடுத்துச் செல்வதுபோல், ஏச்சுக்களையும் எடுத்துச் செல்லுங்கள்,'** என்றார்

அதுவரையில் புத்தரை அவமதித்து பேசிய

அந்த மனிதன், தனது தவறை உணர்ந்து புத்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கி அவரிடம்
மன்னிக்க வேண்டினான். நாளடைவில் அவன் புத்தரின் சீடனாகவும் மாறினான்.

இதேபோல் தான் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியின் மீது எழுப்பப்படும் விமர்சனங்கள் எதற்கும் அடிப்படை ஆதாரம் கிடையாது. எனவே பகவான் புத்தர் அவர்கள் கூறியது போல் அனைத்து விமர்சனங்களும் அவர்களிடமே திரும்பச் செல்லும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது எதிர்க்கட்சி தலைவருக்கு பொருந்தும்.

கன்னியாக்குமரி மாவட்ட மக்கள் பயன்பெறும்
வகையில் அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மரியாதைக்குரிய அண்ணன் இராதாகிருஷ்ணன் அவர்களும், நம்முடைய முன்னாள் அமைச்சர் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.தளவாய் சுந்தரம் அவர்களும், நம்முடைய இரண்டு மாவட்டச் செயலாளர் அவர்களும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கழகத்தினுடைய நிர்வாகிகள் பலபேர் நீங்கள் கன்னியாகுமரிக்கு வருகின்றீர்கள். வருகின்ற போது, பல்வேறு திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நான் சொன்னேன், தமிழகம் முழுவதும் அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். கன்னியாகுமரியில் தான் கிடைக்கவில்லை. அதற்கு அவர்கள் சொன்னார்கள். என்னை சந்தித்து, எனக்கு அழைப்பிதழ் கொடுகின்ற போது, கன்னியாகுமரிக்கு வந்து பாருங்கள் அப்பொழுது கன்னியாகுமரி மாவட்டம், அம்மாவுடைய கோட்டை என்பதை உங்கள் வாயால் சொல்ல வைப்பேன் என்று சொன்னார்கள். அவர் சொன்னதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக காண்பித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டம் மற்ற மாவட்டத்திற்கு இளைத்தது அல்ல என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கன்னியாகுமரி மாவட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் நிரூபித்து காட்டியிருக்கின்றீர்கள்.
(கன்னியாகுமரி மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகள்)

இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான் பல்வேறு திட்டங்களை நாங்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். இன்றைக்கு வேண்டுமென்றே திட்டமிட்டு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக புதிதாக பொறுப்பேற்றிருக்கின்றார், அவர்

எதிர்க்கட்சியின் தலைவராகவும் இருக்கின்றார். அவர் பேசுவதெல்லாம் அத்தனையும் பொய். பொய் பேசுவதற்கு ஒரு டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது ஸ்டாலினுக்கு பொருந்தும். மைக் கிடைத்தால் போதும், உடனே அஇஅதிமுக அரசின் மீது பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுவது. இது வாடிக்கையாகிவிட்டது. அவர் சொல்வது ஒன்ற கூட உண்மையில்லை. இன்றைக்கு அண்மையிலே பல்வேறு பிரச்சினைகள் குறித்து சொன்னார். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து தமிழகம், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்குவதற்கு இரவு, பகல் பாராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

காவிரி நதிநீர் பிரச்சினையில் 50 ஆண்டுகாலமாக நாம் போராடிக் கொண்டிருந்தோம். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சியிலே துவக்கப்பட்டு, இதயதெயவம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி இன்றைக்கு அம்மா வழியில் வந்த அம்மாவின் அரசு உச்சநீதிமன்றத்தின் வாயிலாக 50 ஆண்டுகாலம் போராட்டத்திற்கு விடிவுகாலம் பிறப்பித்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன். நல்ல தீர்ப்பை நாம் பெற்றிருக்கின்றோம். இன்றைக்கு டெல்டா பாசன விவசாயிகள் வயிற்றிலே பால்வார்த்திருக்கின்றோம். ஆகவே, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக உச்சநீதிமன்றத்தின் மூலமாக நல்ல தீர்ப்பை சட்டரீதியாக பெற்றிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டு காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை நாம் நிறைவேற்றித் தந்திருக்கின்றோம்.

சிறு நகரங்களுக்கு விமான போக்குவரத்து வழங்கப்படும் மத்திய அரசின் உதான் திட்டத்தை இன்றைக்குச் சேர்த்து பல்வேறு இடங்களிலே விமான நிலையத்தை அமைப்பதற்கு மத்திய அரசோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

அதேபோல, தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட, நீரா பான உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு வேளாண் பெருமக்கள் பல்வேறு பகுதிகளில் தென்னை மரங்கள் வளர்க்கின்றார்கள். அவர்களுக்கு போதுமான வருமானம் இல்லையென்று கோரிக்கை வைத்தார்கள். எங்களுக்கு நீராபானம் உற்பத்தி செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அம்மாவினுடைய அரசு நீராபானம் உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகளை லைசென்ஸை கொடுத்து அவர்களுடைய வருமானத்தை இரட்டிப்பாக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோல, வேளாண் பெருமக்களுக்கு பல்வேறு மானியத் திட்டங்கள் அளித்துள்ளோம். மண் வளத்தினைப் பாதுகாப்பதற்கும், நீர்நிலைகளை பராமரிப்பதற்குமான குடிமராமத்துத் திட்டம் அறிமுகப்படுத்தினோம். எங்கெங்கெல்லாம் ஏரிகள், குளங்கள் இருக்கின்றதோ அங்கெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்கள் இலவசமாக வண்டல்மண்ணை அள்ளிக் கொள்ளலாம். அந்த அறிவிப்பை அம்மாவினுடைய அரசுதான் தந்தது. ஒரு டிராக்டர் மண்கூட அள்ளமுடியாத நிலையை மாற்றி, இன்றைக்கு விவசாய பெருங்குடி மக்களுக்கு அடி உரமாக, இயற்கை உரமாக பயன்படுத்துவதற்கு ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல்மண்ணை இலவசமாக அவர்களுடைய நிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்துகின்றார்கள். இரண்டு வழியிலே நன்மை பெறுகின்றார்கள், ஒன்று, ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை

அள்ளுகின்றபொழுது, ஏரி ஆழமாகின்றது, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்படுகின்றது. அதேபோல இந்த வண்டல்மண் விவசாயிகளின் நிலத்திற்கு உரமாக பயன்படுத்தப்படுகின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் அதிகமாக சாலைகளை போட்டுக் கொண்டிருக்கின்றோம். என்றைக்கும் இல்லாத அளவிற்கு எங்கெங்கெல்லாம் மக்கள் பாலங்கள் வேண்டுமென்று கேட்டார்களோ, அத்தனை இடத்திற்கும், பெரும்பாலான இடத்திற்கு பாலங்களை அம்மாவின் அரசு தந்து, போக்குவரத்து நெரிசல் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை சுட்டிக் காட்ட விழைகின்றேன்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக சூழியல் சுற்றுலாக் கொள்கை மற்றும் மாநில சுற்றுலாக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளன.

பிளாஸ்டிக் ஒழிப்புக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, நடைமுறைக்கு வரவுள்ளன. ஏனென்றால் இதில்தான் சுகாதார சீர்கேடு விளைகின்றது. சுகாதார சீர்கேடு விளைகின்ற இந்த பிளாஸ்டிக்கை முற்றிலும் ஒழிக்க வேண்டுமென்று பொது மக்களிடத்திலே கோரிக்கை வந்து கொண்டிருந்தது. கோரிக்கையை ஏற்று, 2019 ஜனவரி முதல், தமிழகத்திலே, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படுகின்ற பிளாஸ்டிக்கை பயன்படுத்தக்கூடாது என்ற ஆணையை அம்மாவின் அரசு பிறப்பித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விபத்து மற்றும் எதிர்பாராத உயிரிழப்புகளுக்கு இந்த அரசு உடனடியாக நிவாரணம் வழங்கி வருவது மக்களுக்கு ஆறுதலாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளது என்பதை இங்கே மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு 1511 ஏரிகள் எடுக்கப்பட்டு அந்தப் பணிகள் துவங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றது என்பதையும் இந்த

நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோல பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட கடலில் கலக்காமல் தடுப்பதற்கு ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு அம்மாவின் அரசு, மூன்றாண்டு காலத் திட்டம் என்று அந்தத் திட்டத்தை வகுத்து, 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இந்த தடுப்பணைகளுக்காக 350 கோடி ரூபாய் இந்த வருடம் செலவிட இருக்கிறது. அதற்காக, 75 தடுப்பணைகள், 7 அணைக்கட்டுகள் அமைக்கும் பணி இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களை மேம்படுத்த புதிய திட்டங்களை அரசுக்கு வகுத்துக் கொடுக்க பொதுப்பணித் துறையில் ஒரு மிகப் பெரிய திட்டத்தை வகுத்திருக்கின்றோம். தமிழகத்திலே ஒவ்வொரு முறையும் விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைப்பதில்லை, குடிப்பதற்கான நீர் கிடைப்பதில்லை. ஆகவே, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் முழுமையாக சேமித்து வைக்க வேண்டும், அதற்கு ஒரு திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்பதற்காக ஓய்வு பெற்ற பொறியாளர்கள் கொண்ட குழுவை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு அமைத்திருக்கின்றது. அந்தக் குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்க எந்தெந்த வகையிலே தடுப்பணை கட்டவேண்டும், எந்த வகையிலே ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும், பலப்படுத்த வேண்டும் அந்த அமைப்புகள் எல்லாம் சரிசெய்து அறிக்கையாக அரசுக்கு தர இருக்கின்றார்கள். அவர்கள் தருகின்ற அறிக்கையின் அடிப்படையிலே பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் தடுப்பதற்கு தடுப்பணைகள் கட்டுவதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும், எங்கெங்கு ஏரிகள், குளங்கள் இருக்கின்றதோ, எதையெதை ஆழப்படுத்த வேண்டுமோ, அவைகளையெல்லாம் ஆழப்படுத்துவற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், ஆங்காங்கே இருக்கின்ற ஆறுகளை இணைக்கின்ற திட்டத்தையும் இந்தக் குழு அரசுக்கு பரிந்துரை செய்யும். ஆகவே, இந்தக் குழு மூலமாக, பெய்கின்ற மழைநீரை வீணாகாமல் நாம் பயன்படுத்துகின்ற

சூழ்நிலையை உருவாக்குவதற்கு தமிழ்நாடு நீர் ஆதார மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டு, பணிகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, டெல்டா பாசன விவசாய பெருங்குடிமக்கள் ஒவ்வொரு முறையும் கடைகோட்டுப் பகுதிக்கு தண்ணீர் வரவில்லை என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதமாக, இன்றைக்கு அதற்கு தனியாக டெல்டா பாசனம் பெறுகின்ற அந்த மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் பயன்பெறுவதற்காக அங்கே ஒரு ஐ.ஹ.ளு. அந்தஸ்தில் ஒரு இணைச் செயலாளர் அந்தஸ்தில் ஒருவரை நியமிக்கப்பட்டிருக்கின்றது, அவர் மூலமாக நிரந்தரமாக இந்தப் பணி வழங்கப்பட்டிருக்கின்றது. அவர் ஒவ்வொரு டெல்டா மாவட்டப் பகுதிக்கும் சென்று என்ன நிலவரம் என்று அறிந்து, அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுத்து கடைக்கோட்டில் இருக்கின்ற விவசாயிகளுக்கும் தேவையான தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்யும் என்பதை கோடிட்டு காட்ட விரும்புகின்றேன்.

அதுபோல கல்வி நிறைந்த மாவட்டம் இந்த மாவட்டம். தமிழகத்திலே அதிகமாக படித்தவர்கள் கொண்ட மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். இந்த இடத்தில் சொல்வது சாலச் சிறந்தது என்று கருதுகிறேன். வசதி படைத்தவர்கள் தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படித்து விடுகிறார்கள். வசதியில்லாத மாணவ, மாணவிகள் பொருளாதாரம் இல்லாததால், தனியார் கல்லூரியில் படிக்க முடியாத சூழ்நிலை. அப்படிப்பட்ட மாணவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும், பட்டப் படிப்பு படிக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்தார்கள். அம்மாவினுடைய அரசு, அம்மாவினுடைய வழியில் நின்று 11 அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியைக் கொடுத்து 76 அரசு மற்றும் கலைக்கல்லூரியைக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்

அரசு கல்லூரிகளாக தரம் உயர்த்தப்பட்டது. தேசிய சேர்க்கை விதிதம் உயர்கல்வியில் பார்த்தால் இந்திய அளவில் 25.8 சதவீதம். ஆனால் தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் கல்வியில் ஏற்படுத்திய புரட்சி, மறுமலர்ச்சியின் காரணமாக புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியதன் விளைவாக, இன்னும் பல கல்லூரிகள், என்ஜினியரிங் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி என்று பல்வேறு கல்லூரிகள் அரசின் சார்பாக துவக்கப்பட்டதன் விளைவாக இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை தமிழகத்திலே 48.60 சதவீதமாக இருந்து இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்ற பெருமையை அம்மாவினுடைய அரசு பெற்றிருக்கின்றது என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு பள்ளியே இல்லாத பகுதிகள் இருக்கக்கூடாது என்பதற்காக அம்மாவின் அரசு இந்த ஆண்டு கிராமங்கள் மற்றும் மலைப்பாங்கான இடங்களில் 20 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 100 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அம்மாவின் அரசு, மாணவர்கள் அந்தப் பகுதியிலே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது என்று தெரிவிக்க விரும்புகிறேன். கல்வித் துறையிலே அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்த துறை பள்ளிக் கல்வித் துறை. பள்ளிக் கல்வித் துறைக்காக முன் எப்போதும் இல்லாத வகையில் **இந்த ஆண்டில் 27 ஆயிரத்து 205 கோடியே 88 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து தரமான, உயர்தர கல்வியை தமிழக மாணவ, மாணவியர்களுக்கு வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.**

அரசு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாகி 2 நிமிடங்களுக்குள் குறுஞ்செய்தி மூலம் மாணவர்களுக்கு அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அனுப்பப்படுகின்றன. இது வரலாற்றுச் சாதனை.

- ❖ அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 14 வகையான விலையில்லா நலத் திட்டங்களைகொடுத்தார்கள். மேலும் மாணவர்கள், கல்வி கற்றலில் களைப்பு ஏற்படாமல் இருக்க சத்துணவு திட்டத்தில் கலவைச் சாதம் அளித்தார்கள்.

- ❖ ஆசிரியர் பணி நியமனம் **4,362 ஆய்வக உதவியாளர்களும், 2,373 முதுகலை மற்றும் சிறப்பாசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

- ❖ கடந்த 6 ஆண்டுகளில் 40 ஆயிரத்து 430 ஆசிரியர்களும், 15 ஆயிரத்து 169 பகுதி நேர ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

**ஆகவே, எதிர்க்கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலின் இதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் படிப்பதும் இல்லை, நாம் சொல்வதை கேட்பதும் இல்லை. அவர் கட்சிக்காரர் எழுதிக்கொடுத்தால் அதைப்பற்றித்தான் பேசுகிறார். இங்கே இருக்கும் அமைச்சர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் உட்பட அனைவரும் அவர்கள் துறையிலே பல்வேறு விருதுகளை பெற்றிருக்கின்றோம். இன்றைக்கு வேளாண்மைத் துறை, உள்ளாட்சித் துறை, மின்சாரத் துறை, மருத்துவத் துறை ஆகியவற்றில் விருதுகளை பெற்றிருக்கின்றோம். ஒவ்வொரு துறை வாரியாக, தேசிய அளவில் இன்றைக்கு விருதுகளை பெறுகிறோம் என்று சொன்னால், நிர்வாகத் திறமை எந்த அளவிற்கு தமிழகத்தில் இருக்கின்றது என்பதை**

**எதிர்க்கட்சித் தலைவர் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய விருது பெறுவது சாதரண விஷயமல்ல. இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களைக் காட்டிலும், சிறந்த முறையில் பணியாற்றி, திறம்பட பணியாற்றியதன் காரணமாக ஒவ்வொரு துறையிலும் இன்றைக்கு விருது கிடைத்திருக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு துறையிலும் இன்றைக்கு விருதுகளை நாம் குவித்துக் கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சிக்கு மட்டும் கண்ணுக்கு தெரியவில்லை. நாம் இவ்வளவு விருதுகளை பெறுவதற்குக் காரணம் இந்தத் துறைகளில் சிறந்த முறையில் பணியாற்றியதுதான் காரணம். விருதுகள் பெற்றது மட்டுமல்ல, திறம்பட செயல்பட்டதன் காரணமாக இந்தத் துறைகளின் மூலமாக மக்களுக்கு என்னென்ன நன்மைகள் கிடைத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விழைகின்றேன்.**

- கடந்த 7 ஆண்டுகளில் **254** புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் **221.30** கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன. ஏனென்றால் ஆங்காங்கே இருக்கும் கிராம மக்களக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்கு தகுந்த சிகிச்சை அரசின் மூலமாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காக **254** புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் **221.30** கோடி வழங்கப்பட்டுள்ளது. இதை எதிர்க்கட்சித் தலைவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

- கடந்த 7 ஆண்டுகளில் **165** ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் **190.37** கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேம்படுத்தும் பொழுது அங்கேயே சிறு சிறு ஆபரேஷன்கள் செய்யும் சூழ்நிலையை அம்மாவின்

அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது என்பதை சுட்டிக் காட்ட விழைகின்றேன்.

மருத்துவர் தேர்வு வாரியம் மூலம் இதுவரை மருத்துவர்கள், செவிலியர்கள், இதர பணியாளர்கள் என்று 23 ஆயிரத்து 882 பேர் தேர்வு செய்யப்பட்டு மருத்துவப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வெகு சிறப்பான செயல்பாட்டின் மூலம் தாய்மார்கள் மற்றும் சிசு இறப்பு விகிதம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டில் அடையவேண்டிய நிலையான வளர்ச்சி இலக்குகளை (ளுரளவயயையெடெந னுநளநடழிஅநவே பழயடள) தமிழகம் 14 ஆண்டுகளுக்கு முன்பே இன்றைக்கு அடைந்து இமாலய சாதனை புரிந்துள்ளது. இதெல்லாம் சாதனை அல்லவா ?

- இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாகச் செயல்படுவதில், இந்திய நாட்டிலேயே முதன்மை மாநிலத்திற்கான **மத்திய அரசின் விருதினை தொடர்ந்து மூன்று ஆண்டுகள்** தமிழ்நாடு பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளது. இதற்கு மருத்துவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

- தமிழகத்தில் இதுவரை 6708 உறுப்புகள் 1171 கொடையாளர்களிடமிருந்து தானமாக பெறப்பட்டுள்ளது.

2015 ஆம்ஆண்டு மின்சார விபத்தினால் இரு கைகளையும் இழந்த திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 29 வயதுள்ள திரு நாராயணசாமி

என்பவருக்கு மூளைச்சாவு அடைந்தவரின் கைகளை தானமாக பெறப்பட்டு இரு கைகளையும் பொறுத்தி, சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இவர் தற்போது நலமாக உள்ளார். இன்றைக்கு இந்தியாவிலேயே அரசு மருத்துவமனையில் இரண்டு கையும் இல்லாத ஒருவருக்கு, இறந்தவர் உடலில் இருந்து இரண்டு கைகளையும் எடுத்து பொறுத்தி சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் மருத்துவச் சேவை தழைத்து, செழித்து ஓங்கியிருக்கின்றது. அப்படிப்பட்ட சாதனையை படைத்த அரசைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கின்றார், இந்த ஆட்சியில் எதுவும் நடைபெறவில்லை என்று. இதையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. பெங்களூருவைச் ‘‘பொது விவகாரங்கள் மையம்’’ என்ற ஒரு அமைப்பு சமூக–பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுமையில் இதில் 2018 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது சிறந்த மாநிலமாக திகழ்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று , பல்வேறு சாதனைகளை அனைத்துத் துறைகளிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து நிகழ்த்தி வருகிறது.

இதை எல்லாம் இங்குள்ள எதிர்க்கட்சிகள்
யாரும் ஏற்றுக் கொள்ளவோ, பாராட்டவோ மாட்டார்கள்.
இருந்தபோதும், மாண்புமிகு அம்மாவின் அரசு
தமிழ்நாட்டு மக்களுக்காக எப்பொழுதும்
தன்னுடைய கடமையை முன்னின்று நிறைவேற்றும்.

தற்போதுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு மீது அரசியல் ரீதியான குற்றச்சாட்டுகள் தான் எழுகிறதே தவிர, திட்டப் பணிகள் விறுவிறுவென்று நடந்து வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சில சட்டப் பேரவை உறுப்பினர்கள் பல கோரிக்கை மனுக்களை என்னிடத்திலே நேற்று நேரிலே அளித்தார்கள். அந்தக் கோரிக்கைகளையும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதோடு மிகச் சிறப்பாக, எழுச்சியாக பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் சிறப்பாக நடைபெறுவதற்கு அடித்தளமாக விளங்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் மீண்டும், மீண்டும் நன்றியை தெரிவித்து,

**எங்கள் ஆட்சி**
**என்றும் வாழும்**
**இந்த மண்ணிலே**
என்ற புரட்சித் தலைவரின்
பாடல் வரி ஒன்றினை இங்கே பெருமிதத்துடன் கூறி

அண்ணா நாமம் வாழ்க!
வளர்க புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி!
நன்றி! வணக்கம்!

* * * * *

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (22.9.2018) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்**

1. **கன்னியாகுமரிக்கு மட்டும் வருடந்தோரும் 75 லட்சம் உள்ளூர், வெளியூர் மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இவர்களில் சுமார்**

   **22 லட்சம் சுற்றுலா பயணிகள் மட்டுமே தற்போது விவேகானந்தர் பாறையிலுள்ள நினைவு மண்டபத்திற்கு படகின் மூலம் செல்ல வாய்ப்புள்ளது. மீதமுள்ள சுற்றுலா பயணிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சுமார் 6 கோடி ரூபாய் செலவில் புதியதாக 2 படகுகள் வாங்கப்பட உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

   **மேலும், ஒரே சமயத்தில் 3 படகுகள் விவேகானந்தர் பாறைக்கு செல்வதற்கு ஏதுவாக கூடுதலாக 2 படகு அணையும் தளங்கள் 20 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

   **கூடுதலாக, கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் பாறை செல்ல ரோப் கார் (Rope Car) வசதியும், விவேகானந்தர் நினைவு மண்டபம் அமைந்துள்ள பாறையிலிருந்து திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறைக்கு செல்ல ஒரு கடல் வழி பாலம் (Marine Bridge) ஆகியவை அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் சுமார் 120 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம், சுற்றுலா பயணிகளுடைய எண்ணம் நிறைவேறும். இந்த கன்னியாகுமரி மாவட்ட மக்கள், குறிப்பாக கன்னியாகுமரியில் இருக்கின்ற மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.**

**<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை</u>**

2. விளவங்கோடு வட்டத்தினை பிரித்து கிள்ளியூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய கிள்ளியூர் வருவாய் வட்டம் அமைக்கப்படும்.

3. கல்குளம் வட்டத்தினை பிரித்து, செருப்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய திருவட்டார் வருவாய் வட்டம் அமைக்கப்படும்.

**<u>எரிசக்தித் துறை</u>**

4. கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க ஏதுவாகவும் மற்றும் செண்பகராமன்புதூர் துணை மின் நிலையத்தின் மின்பளுவை குறைக்கும் வகையிலும் ஒரு புதிய 230/ 110 கி.வோ. வளி

மகாப்பு துணை மின் நிலையம் **368** கோடியே **45** லட்சம் ரூபாய் மதிப்பில் தக்கலையில் அமைக்கப்படும்.

<u>நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை</u>

5. **எல்லைகள் மறுசீரமைப்பு குழுவின் பணி நிறைவடைந்தவுடன் நாகர்கோயில் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

   உங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் திரு.பொன். இராதாகிருஷ்ணன் அவர்களம், டெல்லி சிறப்பு பிரதிநிதி முன்னாள் அமைச்சர் திரு.தளவாய் சுந்தரம் அவர்களும், கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினுடைய அனைத்து நிர்வாகிகள், பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, நாகர்கோயில் மக்களுடைய கோரிக்கையையும் ஏற்று இந்த நாகர்கோயில் நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

6. அழகியபாண்டிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் 40 லட்சம் ரூபாய் மதிப்பில் கன்னியாகுமரி வரை நீட்டிக்கப்படும்.

<u>பொதுப்பணித்துறை</u>

7. அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைக்குளம் கிராமத்தில், பழையாற்றின் குறுக்கே
   **5 கோடியே 23 லட்சம் ரூபாய்** மதிப்பில் தடுப்பணை ஒன்று கட்டப்படும்.

8. அகஸ்தீஸ்வரம் வட்டம், கோவளம் கிராமத்தில் **12 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பிலும்,** அழிக்கல் கிராமத்தில் **10 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பிலும்,** பெரியநாயகி தெருவில் **7 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பிலும் தூண்டில் வளைவுகள் 2019–2020–ஆம்** ஆண்டில் அமைக்கப்படும்.

9. விளவங்கோடு வட்டம், மேல்மிடாலம் கிராமத்தில் **10 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பில்** ஒரு **தூண்டில் வளைவு** 2019–2020–ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

10. கிள்ளியூர் ஒன்றியம், இணையம்புத்தன்துறை ஊராட்சிக்குட்பட்ட இணையம் கிராமத்தின் கிழக்கே, தேவாலயம் இருக்கும் பகுதியில் **9 கோடி ரூபாய் மதிப்பில்** ஒரு தூண்டில் வளைவு **2019–2020**ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

11. விளவங்கோடு வட்டம், மார்த்தாண்டம் துறை கிராமத்தில் சர்ச்சுக்கு முன்னால் இடதுபக்கம் மற்றும் வலதுபக்கம் உள்ள வீடுகளை பாதுகாக்கும் பொருட்டு, **80 லட்சம் ரூபாய் மதிப்பில் கடலரிப்பு தடுப்பு** சுவர் 2019–2020ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

12. தோவாளை, தாடிக்காரன்கோணம், கீரிப்பாறை லேபர் காலனி சாலையில் 0/2 கி.மீட்டரில் கீரிப்பாறை ஆற்றின் குறுக்கே **4 கோடி ரூபாய் மதிப்பில்** ஒரு புதிய உயர்மட்டப் பாலம் 2019–2020ஆம் ஆண்டில் கட்டப்படும்.

13. திருவட்டார், பேச்சிப்பாறை, குட்டியூர் தச்சமலை சாலையில், 0/2 கி.மீட்டரில் கிழவியூர் ஆற்றின் அருகில் **4 கோடி ரூபாய் மதிப்பில்** ஒரு புதிய உயர்மட்டப் பாலம் 2019–2020ஆம் ஆண்டில் கட்டப்படும்.

14. தோவாளை, திடல் ஊராட்சிப் பகுதியில், காடுகரை–இறைவிபுதூர் சாலையில் 0/2 கி.மீட்டரில் கஞ்சியாற்றின் குறுக்கே, தற்போதுள்ள பழுதடைந்த குறுகிய பாலத்திற்குப் பதிலாக **2 கோடியே 60 லட்சம் ரூபாய்** மதிப்பில் ஒரு புதிய உயர்மட்டப் பாலம் 2019–2020ஆம் ஆண்டில் கட்டப்படும்.

15. குருந்தன்கோடு, தல்லாக்குளம், இரணியல்–முட்டம் சாலை முதல் தல்லாக்குளம் சாலையில், 0/2 கி.மீட்டரில் வள்ளியூர் ஆற்றின் குறுக்கே **2 கோடி ரூபாய் மதிப்பில்** ஒரு புதிய உயர்மட்டப் பாலம் 2019–2020ஆம் ஆண்டில் கட்டப்படும்.

**நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை**

விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவருடைய பகுதியிலே பல்வேறு சாலைகளை அமைக்க வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். அந்த சாலையெல்லாம் இன்றைக்கு படிப்படியாக CRF மூலமாக எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

16. பெருஞ்சால்விளை சாலையில் கிமீ.1/6ல் **ஒரு கோடி ரூபாய் மதிப்பில்** சிறுபாலம் கட்டப்படும்.

17. வட்டக்கோட்டை –அம்சி சாலையில் கிமீ.6/6ல் **45 லட்சம் ரூபாய் மதிப்பில்** சிறு பாலம் கட்டப்படும்.

18. **குஞ்சிரு**ப்புவிளை – மாதாபுரம் சாலையில் கிமீ.0/6ல் **35 லட்சம் ரூபாய் மதிப்பில்** சிறுபாலம் கட்டப்படும்.

19. தேசிய நெடுஞ்சாலை எண். 47–ல் **கோட்டார் – செட்டிகுளம் பகுதியில் சுமார் 340 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாலம் கட்டப்படும்.** இதற்கு நில எடுப்பு பணிக்காக அம்மாவுடைய அரசு 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

20. **தேசிய** நெடுஞ்சாலை எண். 47 –B வடசேரி – ஒழுகினசேரி பகுதிகளில் ஒர் உயர் மட்ட பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

**89 லட்சம் ரூபாய் மதிப்பில்** நடைபெற்று வருகிறது. விரிவான திட்ட அறிக்கை கிடைத்தப் பின் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

21. நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் கீழ் CRIDP 2018–19 திட்டத்தில் 8 சிறுபாலங்கள் **159 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்** மேம்படுத்தப்படும்.

22. மார்த்தாண்டம் – கருங்கல் சாலை கி.மீ. 1/8–ல் ரயில்வே கி.மீ. 259/500–600–ல் குழித்துறை மற்றும் இரணியல் ரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண்.15B-க்கு மாற்றாக **சாலை மேம்பாலம்** கட்டப்படும்.

<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை</u>

23. கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் தற்போதுள்ள **100 MBBS மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இதை அதிகரிக்க வேண்டுமென்று இந்த மாவட்டத்தில் இருக்கின்ற பலபேர் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையிலே, 100 MBBS சேர்க்கை இருந்த மாவட்டத்தில் சேர்க்கை அதிகரித்து, 150 இடங்களாக உயர்த்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன்.**

24. கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, **8 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பில்** அதிநவீன உபகரணங்கள், **3 கோடியே 50 லட்சம் ரூபாய்** மதிப்பில் புதிதாக கேத் லேப் (Cath Lab) கருவி மற்றும் **42 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்** மதிப்பில் 5 புதிய அதிநவீன டயாலிசிஸ் கருவிகளும் நிறுவப்படும்.

25. கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்தில் **2 கோடியே 68 லட்சம் ரூபாய்** செலவில் 20 சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் அமைக்கப்படும்.

**26.** விளவங்கோடு அரசு மருத்துவமனைக்கு **எண்ணியல் ஊடுகதிர் கருவி, மீயொலி பரிசோதனைக் கருவி போன்ற மருத்துவக் கருவிகள் வழங்கி மேம்படுத்தப்படும்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

* * * *